**செய்தி வெளியீடு எண். 539** **நாள்: 24.12.2006**

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் கிறிஸ்துமஸ் திருநாள் வாழ்த்துச் செய்தி

**இன்று கிறிஸ்துமஸ் திருநாள். உலகம் முழுவதும் மகிழ்ச்சியுடனும், எழுச்சியுடனும் கொண்டாடப்படுகிறது. இந்நாளில், கிறிஸ்துவ சமுதாய மக்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

**பிரெஞ்சு நாட்டுப் பேரரசனாக விளங்கிப் புகழ்கொண்ட மாவீரன் நெப்போலியன் ஒருமுறை கூறும்போது, 'அலெக்சாண்டர், சீசர், சார்லிமேக்னி** (Charlemagne) **ஆகியோரும் நானும் எங்கள் மேதைத் தன்மைகள் மூலம் எதை உருவாக்கினோம்? படைபலத்தை மட்டுமே ! ஆனால், ஏசுநாதர் உருவாக்கிய பேரரசு அன்பை அடித்தளமாகக் கொண்டது; இலட்சக்கணக்கானவர்களை அவர் புகழ் பாடவைத்தது. அந்த அளவுக்கு அன்பை நேசித்தவர் ஏசுநாதர்' என்கிறார்.**

**ஒரு கன்னத்தில் அறைந்தால் சினங்கொள்ளாது, மறுகன்னத்தையும் காட்டி அன்பைப் பாய்ச்சி அறைந்தவனிடமும் மனித நேய உணர்வை விதைத்தவர் மனிதப் புனிதர் ஏசுபெருமான். அவர் பிறந்த பொன்னாள் கிறிஸ்துமஸ் திருநாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்நன்னாளில் உலகெங்கும் அன்பும் அமைதியும் தவழ, சகிப்புத் தன்மை வளர, ஒற்றுமை உணர்வுகள் பெருக ஒன்றுபட்டு உழைப்போம் என உறுதியேற்போமாக.**

---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.